# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **197/2025** |
| **பெயர்: PW-1** | **தென்னரசு** |
| **தந்தை பெயர் :** | **பழனிவேல்** |
| **வயது:** | **36/2026** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **CCTV Operator** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2026.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் Diploma படித்துள்ளேன். நான் **CCTV Operator** வேலையை தவிர வேறு என்ன வேலை செய்கிறேன் என்றால், முன்னர் எனது தந்தையுடன் கடலை வியாபாரம் செய்தேன். என் தந்தை கடலை வியாபாரத்தை தவிர வேறு என்ன வேலை செய்கிறார் என்றால், கடலை வியாபாரம் தான் செய்கிறார். எனது தந்தை வட்டிக்கு பணம் கொடுக்கிறார் என்றால், இல்லை.

2. எதிரியானவரை எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால், பக்கத்து கடை, 20 வருடமாக பழக்கம் ஆவார். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால், பெட்டிக்கடை வைத்துள்ளார்.

3. நான் எதிரிக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்றால்,ரூ.2 இலட்சம் கொடுத்தேன். எப்போது கடன் கேட்டார் என்றால், 18.10.2024 அன்று நான் கடன்கொடுத்தேன், அதற்கு 2-3 மாதங்களுக்கு முன்பு கடன்கேட்டார். எதிரியானர் எந்த தேதியில் குறிப்பாக கடன்கேட்டார் என்றால், எதிரியானவர் பல நாட்களில் கேட்டதால் குறிப்பாக தேதி சொல்லமுடியவில்லை.

4. நான் எதிரிக்கு கடன்கொடுத்ததற்கு ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால், இல்லை, கைமாற்றாகதான் கடன் கொடுத்தேன். எதிரியானவர் எத்தனை நாட்களில் பெற்ற கடனை திருப்பி தருவதாக கூறினார் என்றால், 2 மாதங்கள் ஆகும்.

5. எதிரி என்னிடம் கடன் பெற்ற விபரம் யாருக்கு தெரியும் என்றால், எனக்கு மட்டும்தான் தெரியும். எதிரியிடம் நான் கடனை எப்போது திருப்பி கேட்டேன் என்றால், 19.01.2025 ஆகும். அதற்கு எதிரி என்ன பதில் கூறினார் என்றால், என்னிடம் பணம் இல்லை என்று கூறினார். அதன்பின் 19.01.2025 தேதியன்று எனக்கு காசோலை கொடுத்தார். அந்த காசோலையை எதிரியே பூர்த்தி செய்தாரா என்றால், எதிரிதான் பூர்த்தி செய்தார். நான் எப்போது காசோலையை கலெக்சனிற்கு செலுத்தினேன் என்றால், 28.03.2025 அன்று என்னுடைய IOB வங்கியில் செலுத்தினேன்.

6. வழக்கு காசோலையை என்ன காரணத்தினால் திருப்பப்பட்டது என்றால், பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது. காசோலை திருப்பட்டதை பற்றி எதிரியிடம் கேட்டேனா என்றால், இல்லை. நான் எதிரிக்கு உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் காசோலை திருப்பட்டதை பற்றி எதிரியிடம் கூறியிருப்பேன் என்றும், நான் பணம் கொடுக்காததால்தால் தான் திருப்பி கேட்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

7. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரியானவர் அதில் உள்ள சங்கதியை மறுத்தும், பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரிதான்.

8. எனது தந்தை பெரிய கடை தெருவில் வைத்திருந்தார் என்றும், அந்த தெருவில் கார்த்திகேயன் டிரேடர்ஸ் என்ற ஒரு கடை இருந்தது என்றால், சரிதான். கார்த்திகேயன் டிரேடர்ஸ் -ன் உரிமையாளரான கார்த்திகேயன் தற்போது உயிருடன் இல்லை என்றால்,சரிதான். கார்த்திகேயன் என்பவர் 10.07.2021 அன்று கடன்தொல்லையால் தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னால், சரிதான். கார்த்திகேயன் என்பவரை எதிரிதான் என் தந்தையிடம் அறிமுகம் செய்தார் என்றால், சரிதான். கார்த்திகேயன் தீபாவளி, பொங்கல் சமயத்தில் எனது தந்தையிடம் கடன் பெறுவது வழக்கம் என்றால், சரிதான். கார்த்திகேயன் என்பவர் என்னுடைய தகப்பனாரிடம் பெற்ற கடனை வியாபாரம் செய்து அதில் வரும் இலாபத்தை கொண்டு அசலும்

வட்டியுமாக திருப்பி செலுத்திவிடுவார் என்றால், சரிதான். அதைபோல் எதிரியும் கார்த்திகேயன் எனும் நபருக்கு வியாபாரம் செய்வதற்காக பணம் கொடுப்பார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. கார்த்திகேயன் இறப்பதற்கு முன் எனது தந்தையிடம் ரூ.5 இலட்சம் கடன் வாக்கியுள்ளார் என்றும், அந்த கடனை திருப்பி கொடுப்பதற்கு முன்பே கார்த்திகேயன் இறந்துவிட்டார் என்று சொன்னால், சரிதான். கார்த்திகேயன் இறந்ததற்கு பிறகு பணத்தை திருப்பி கொடுக்க சொல்லி கார்த்திகேயன் குடும்பத்தை தொந்தரவு செய்தோம் என்றால், சரியல்ல, காவல் நிலையத்தில் புகார்தான் கொடுத்தேன். கார்த்திகேயன் குடும்பத்தை தொந்தரவு செய்ததாக அவரது மகளான வைஷ்ணவி என்பவர் , எனது தகப்பனார் மீதும், ஆஜர் எதிரி மீதும் மற்றும் 11 நபர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் எனது தகப்பனார் மீதும், ஆஜர் எதிரி மீதும் மற்றும் 11 நபர்களை அழைத்து கார்த்திகேயன் குடும்பத்தினர்களை இனி தொந்தரவு செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது என்றால், சரிதான்.

9. ஆஜர் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால், சரியல்ல. கார்த்திகேயன் என்பவரை என்னிடம் அறிமுகப்படுத்தியதன்பேரில் நான் கடன்கொடுத்தேன் என்றும், அந்த கடனை செலுத்துவதற்கு முன்பு கார்த்திகேயன் இறந்துவிட்டதால், அவரை எனக்கு அறிமுகப்படுத்திய காரணத்தினால் எதிரியை மிரட்டி கார்த்திகேயனுக்கு கொடுத்த பணத்தை பெறும் நோக்கில் வழக்கு காசோலையை எதிரியிடம் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

10. கார்த்திகேயன் எனது தந்தையிடம் பெற்ற கடனிற்கு ஆஜர் எதிரி எந்தவொரு நிபந்தனையோ அல்லது ஜாமின் கையொப்பமோ போடவில்லை என்றால், சரிதான்.

11. 02.09.2024 அன்று என் தகப்பானாரின் நண்பரான சண்முகசுந்தரம் மற்றும் பாபு ஆகியோர்கள் எதிரியை கோட்டைக்குளத்தை சேர்ந்த கார்த்திகேயன் வீட்டிற்கு அழைத்து சென்று மிரட்டி காசோலைகளை பெற்றார்கள் என்றால், சரியல்ல. 16.09.2024 அன்று எதிரியின் மகளுக்கு திருமணம் என்றும், அதனை பின்னிட்டு 26.09.2024 அன்று எதிரியின் வங்கியில் எதிரியானவர் Stop payment என்று எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால், என்னை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் இப்படி

செய்திருக்கிறார், காசோலையை எதிரியே பூர்த்திசெய்து கொடுத்தார், அவரை யாரும் மிரட்டவில்லை.

12. ஆஜர் எதிரியிடம் எத்தனை காசோலை பெற்றேன் என்றால், 1 காசோலைதான் பெற்றேன். நான் 1 காசோலை பெறவில்லை என்றும், 2 காசோலைகள் மிரட்டி பெற்றேன் என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கு காசோலை எண் என்னவென்றால், 00 00 11 ஆகும். நான் 2 காசோலைகள் மிரட்டி வாங்கினேன் என்றும், அதில் ஒரு காசோலை இவ்வழக்கு காசோலை என்றும், மற்றொரு காசோலையின் எண்ணானது 00 00 10 என்று சொன்னால், நான் மிரட்டி காசோலை வாங்கவில்லை.

13. 00 00 10 என்ற காசோலையானது 30.10.2024 அன்று நான் கலெக்சனிற்கு செலுத்தி அது திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. 00 00 10 என்ற காசோலை திருப்பப்பட்டதற்கு பின் எனது தந்தை மற்றும் அவரது நண்பர்கள் எதிரியை அவரது கடையில் வைத்து மிரட்டியதன்பேரில் பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் என் தந்தை மற்றும் அவரது நண்பர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால், எனக்கு தெரியாது. இப்புகார் சம்பந்தமாக எனது தந்தையை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்று சொன்னால், விசாரிக்கலாம்.
**(கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.